MAY 2025 **P/ID 35312/PTL1B**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு முறையே 50 சொற்களில் விடை எழுதுக.

1. பன்னிரு ஆழ்வார்கள் யாவர்?

2. நாச்சியார் திருமொழி - நூற்குறிப்புத் தருக.

3. ஆண்டாளின் நாயகன் யார்?

4. குலசேகரப்படி என்றால் என்ன?

5. கண்ணனின் மாயப்பேச்சு குறித்துக் குலசேகரர் கூறுவனவற்றைக் குறிப்பிடுக.

6. தென்னவன் பிரம்மராயன் யார்?

7. திருவாசகம் - குறிப்புத் தருக.

8. திருஞானசம்பந்தரின் பிறப்பினைச் சுட்டுக.

9. திருப்பிரம்மபுரத்தின் சிறப்பு யாது?

10. அந்தாதி என்றால் என்ன?

11. காரைக்கால் அம்மையார் எழுதிய நூல்களைக் குறிப்பிடுக.

12. காரைக்கால் அம்மையாரின் இல்லற வாழ்வினைச் சுட்டுக.

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு முறையே 250 சொற்களில் விடை எழுதுக.

13. ஆண்டாள் கண்ட கனவினை எழுதுக.

14. நாச்சியார் திருமொழியில் இடம்பெற்றுள்ள புராணச் செய்திகளைத் தொகுத்துரைக்க.

15. திருவேங்கடத்தானின் சிறப்புகளைக் குலசேகர ஆழ்வாரின் வழிநின்று விளக்குக.

16. சிவனின் பெருமைகளாக மாணிக்கவாசகர் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

17. 'தோடுடைய செவியன்' எனத் தொடங்கும் பாடற்கருத்தினை எடுத்துரைக்க.

18. அற்புதத் திருவந்தாதியைத் திறனாய்க.

19. இறைவனின் அருட்குணங்களாகக் காரைக்கால் அம்மையார் கூறுவனவற்றை எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு முறையே 500 சொற்களில் விடை எழுதுக.

20. கண்ணனின் குறும்புச் செயல்களை நாச்சியார் திருமொழியின் வழிநின்று விவரிக்க.

21. குலசேகர ஆழ்வார் திருமாலின் மீது கொண்டுள்ள பக்திச் சிறப்பினைக் கட்டுரைக்க.

22. மாணிக்கவாசகத்திற்கு ஏது மறுவாசகம்? என்பார் தம் கூற்றை ஆய்க.

23. உள்ளம் கவர் கள்வனாகத் திகழும் சிவபெருமானின் சிறப்பியல்பினை ஞானசம்பந்தரின் வழிநின்று விளக்கி உரைக்க.

24. சிவபெருமானை முழுமையாகச் சரணடையும் முறைமையைக் காரைக்கால் அம்மையாரின் வழிநின்று விவரி.

———————